# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

2070 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு மே மாதம் 04 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

### பதவிகள் - வெற்றிடம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகளுக்கும் பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளுக்கும் அறிவுறுத்தல்களுக்கும் மேற்படி வர்த்தமானியைப் பார்க்கவும்

**அரச சேவைகள் ஆணைக்குழுவின் வழிகாட்டுதலுக்கு அமைய நீதி அமைச்சின் கீழ் உள்ள சட்டமா அதிபர் திணைக்களத்தின் அரச சட்டவாதி பதவிக்கான ஆட்சேர்ப்பு**

சட்டமா அதிபர் திணைக்களத்தின் அரச சட்டவாதி பதவிக்கான ஐம்பது (50) வெற்றிடங்களை நிரப்புவதற்கு கீழே குறிப்பிட்டுள்ள தகுதிகளையுடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **ஆட்சேர்ப்பு முறை** .- அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள தகுதிகளை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள், அரச சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சட்டமா அதிபர் திணைக்களத்தின் சிரேஷ்ட உத்தியோகத்தர்களைக் கொண்ட நேர் காணல் குழுவினால் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் நேர்முகம் காணப்பட்டு, 50 புள்ளிகள் அல்லது அதற்கு அதிகமான புள்ளிகளைப் பெற்றவர்களில் இருந்து வெற்றிடங்களில் இருமடங்கானோர் இறுதிக் கட்டமைக்கப்பட்ட நேர்முகம் காணலுக்கு அழைக்கப்படுவர்.

   இறுதி கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பதாரிகளின் வரிசைக்கிரமப்படி நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு அமைவாக ஆட்சேர்ப்பு செய்யப்படும். அதன் போது ஆணைக்குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட (இல. 5 இன் கீழ் காட்டப்படும்) புள்ளி வழங்கும் ஒழுங்கு முறைக்கு அமைவாக கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும்.

2. **தேவையான தகைமைகள்:-**

   (i) ***கல்வி/தொழில்சார் தகைமைகள் :***
   இலங்கை உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்திருத்தல் வேண்டும்.

   (ii) ***தேக ஆரோக்கியத் தகைமைகள்:***

   ஒவ்வொரு விண்ணப்பதாரியும் இலங்கையின் எந்த பிரதேசத்திலும் கடமையாற்ற, பதவிக்கான கடமைகளை மேற்கொள்ளத்தக்க தேக மற்றும் மன ஆரோக்கியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

   (iii) ***ஏனையவை:***

   - இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்;
   - சிறந்த நன்னடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்;
   - இலங்கைச் சட்டங்களின் கீழ் எவ்வித குற்றத்துக்கும் குற்றம் சாட்டப்படாதவராக இருத்தல் வேண்டும்;
   - ஆரம்ப மட்ட தகைமைகளை பரீட்சிக்கும் நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும் திகதியன்று இப் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தேவையான தகைமைகள் அனைத்தையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

   (iv) ***வயதெல்லை :***
   விண்ணப்ப முடிவுத் திகதியன்று விண்ணப்பதாரி 22 வயதுக்கு குறையாதவராகவும் 35 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

3. **பணிக்கமர்த்தும் நிபந்தனைகளும் சேவை நிபந்தனைகளும் :-**

   (i) இப்பதவி ஓய்வூதியத்துக்கு உரித்துடையது. உமக்கு உரித்தான ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் கொள்கைத் தீர்மானங்களுக்கு நீர் கீழ்ப்படிதல் வேண்டும். மேலும் நீர் தபுதாரர்/ அநாதை ஓய்வூதியத் திட்டத்துக்கு, விதவை/ அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்துக்கு பங்களிப்பு செய்ய வேண்டும். அரசாங்கத்தினால் காலத்துக்கு காலம் விதிக்கப்படும் விதிமுறைகளுக்கு ஏற்ப நீர் இவற்றுக்கான பங்களிப்புகளை செலுத்த வேண்டும்.

   (ii) நியமனங்கள் 3 வருட தகுதிகாண் காலத்துக்கு உட்பட்டதாகும்.

   (iii) பொது நிர்வாக சுற்றிக்கை இல. 01/ 2014 இன் பிரகாரம் குறிப்பிட்ட காலப்பகுதியினுள் சேவையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட மொழிக்கு மேலதிகமாக மற்றைய அரச கரும மொழி தொடர்பாக தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும். அரச கரும மொழி அல்லாத மொழி மூலமாக சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்ட அலுவலகர்கள் தகுதிகாண் காலத்தினுள் உரிய அரச கரும மொழி தொடர்பான தேர்ச்சியினை பெற்றிருத்தல் வேண்டும்.

   (iv) நியமனங்கள் அரச சேவை ஆணைக்குழு ஊழியர் ஒழுங்கு விதிகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவைக்கும் அரசாங்க நிதி ஒழுங்கு விதிகளுக்கும் திணைக்கள கட்டளைச் சட்டத்துக்கும் இப் பதவி நியமனம் கட்டுப்பட்டதாகும்.

4. **சம்பள அளவுத்திட்டம் :-**
   இப்பதவிக்கான மாதாந்த சம்பள அளவுத் திட்டம் ரூபா 75,000-10 x 1,630- ரூபா 91,300 (AGS2-2016) ஆகும்.

5. கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை கீழ்க் காட்டப்பட்ட புள்ளி வழங்கும் முறைக்கு அமைவாக நடாத்தப்படும்.

| விடயம் | அதிகூடிய புள்ளிகள் | விவரணம் | புள்ளிகள் |
|---|---|---|---|
| 01. கல்வித் தகைமைகள் | 20 புள்ளிகள் | (i) அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனமொன்றினால்/பல்கலைக்கழகம் ஒன்றினால் வழங்கப்பட்ட பட்டப்பின் கற்கை சட்டமுதுமாணிப் பட்டம் (LLM) | 10 புள்ளிகள் |
| | | (ii) அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனமொன்றினால்/பல்கலைக்கழகம் ஒன்றினால் வழங்கப்பட்ட குறித்த சட்டம் தொடர்பான பட்டப்பின் கற்கை டிப்ளோமா பட்டம். | 08 புள்ளிகள் |
| | | (iii) அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனமொன்றினால்/பல்கலைக்கழகம் ஒன்றினால் வழங்கப்படும் சட்டமாணி பட்டம் (LLB) முதலாம் தர சித்தி. | 07 புள்ளிகள் |
| | | (iv) அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனமொன்றினால்/பல்கலைக்கழகம் ஒன்றினால் வழங்கப்படும் சட்டமாணி பட்டம் (LLB) இரண்டாம் தர மேல் நிலைச் சித்தி. | 06 புள்ளிகள் |
| | | (v) அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனமொன்றினால்/பல்கலைக்கழகம் ஒன்றினால் வழங்கப்படும் சட்டமாணி பட்டம் (LLB) இரண்டாம் தர கீழ் நிலைச் சித்தி. | 05 புள்ளிகள் |
| | | (vi) இலங்கை சட்டக் கல்லூரியில் இறுதி பரீட்சையில் முதலாம் தர சிறப்புச் சித்தி. | 07 புள்ளிகள் |
| | | (vii) இலங்கை சட்டக் கல்லூரியில் இறுதி பரீட்சையில் இரண்டாம் தர சிறப்புச் சித்தி. | 06 புள்ளிகள் |
| | | அரச அங்கீகாரம் பெற்ற பல்கலைக்கழகம் என்பது சட்டக் கல்வி கூட்டு இணைவுச் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது ஓர் நிறுவனம். (மேலே கூறப்பட்ட அனைத்து தகைமைகளும் அதிகபட்சமாக 20 புள்ளிக்குள் அடங்கும்)<br><br>மேல் கூறப்பட்ட கல்வித் தகைமைகள் சான்றுப் பத்திரங்கள் மூலம் நிரூபிக்கப்படுதல் வேண்டும். | |
| 02.சட்டத்தரணி ஒருவராக பெற்றுக் கொண் டுள்ள தொழில்சார் அனுபவம் | 20 புள்ளிகள் | (i) வழக்கு நடவடிக்கைகளுக்காக நீதிமன்றத்தின் முன் தோன்றி கடமையாற்றிய திறமைகள். | 10 புள்ளிகள் |
| | | (ii) பதிவு செய்யப்பட்ட சட்டத்தரணியாக அல்லது சட்ட ஆலோசகராக கடமையாற்றிய போது வெளிப்படுத்திய திறமைகள். (மேலே குறிப்பிடப்பட்ட திறமைகளுக்கான சான்றுப் பத்திரங்கள் சமர்ப்பிக் கப்படுதல் வேண்டும்.) | 10 புள்ளிகள் |
| | | **குறிப்பு**:- நீதிபதி ஒருவரினால் தொழில் திறன் தொடர்பில் நற்சான்று பத்திரம் மற்றும் 20 வருடங்களுக்கு குறையாமல் பணியாற்றிய சட்டத்தரணிகள் இருவரிடம் இருந்து பெற்றுக்கொண்ட நற்சான்று பத்திரங்கள் என்பவை சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். சட்டமா அதிபர் திணைக்களத்தின் சட்ட அதிகாரிகளினால் வழங்கப்பட்ட நற்சான்றுப் பத்திரம் ஏற்புடையதாகாது. | |
| 03. விசேட திறமைகள் | 50 புள்ளிகள் | (i) தொடர்பாடல் திறமைகள் | 12.5 புள்ளிகள் |
| | | (ii) சந்தர்ப்பத்துக்கு ஏற்ற பேச்சுத்திறன் | 12.5 புள்ளிகள் |
| | | (iii) சபையின் முன் வெற்றிகரமாக தோற்றும் திறமை | 12.5 புள்ளிகள் |
| | | (iv) மொழியை கையாலும் திறமை | 12.5 புள்ளிகள் |
| 04. நேர்முகப் பரீட்சையின் போது காண்பிக்கும் திறமைகள் | 10 புள்ளிகள் | (i) ஆளுமை | 5 புள்ளிகள் |
| | | (ii) தலைமைத்துவ பண்புகள் | 5 புள்ளிகள் |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழை திருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2018, மே மாதம் 25 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2018, மே மாதம் 11 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

6. **விண்ணப்பதாரிகளின் ஆளடையாளம்:-**

சகலவிதத்திலும் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரமே கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சைக்கு அழைப்பு விடுக்கப்படும்.

நேர்முகப் பரீட்சையில் சகல சான்றிதழ்களினதும் மூலப்பிரதியும் உரிய முறையில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட புகைப்படப் பிரதிகளையும் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

நேர்முகப் பரீட்சையில் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக கீழ்க்காணும் ஆளடையாள ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்:-

(அ) ஆட்களைப் பதிவுசெய்யும் ஆணையாளரினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை;

(ஆ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு .

7. **விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் :-**

(i) விண்ணப்பங்களை கொழும்பு 12, சட்டமா அதிபர் திணைக்களத்தின், நிருவாகப் பிரிவில் பெற்றுக்கொள்ள முடியும் என்பதுடன் 2018.06.04 ஆந் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கத்தக்கவாறு "சட்டமா அதிபர், சட்டமா அதிபர் திணைக்களம், த. பெ. இல. 502, கொழும்பு 12" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். 2018.06.04 ஆந் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்;

(ii) விண்ணப்பப்படிவம் உள்ளடங்கிய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் " அரச சட்டவாதி பதவிக்கான விண்ணப்பம்" என குறிப்பிடப்படல் வேண்டும்.

8. **போலியான தகவல்களை வழங்குதல் :-**
தங்களால் அனுப்பிவைக்கப்படும் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனுமொரு தகவல் போலியானது அல்லது பிழையானது என ஆட்சேர்ப்புச் செய்யப்படும் முன் கண்டுபிடிக்கப்பட்டால் தங்களின் விண்ணப்பம் நிராகரிக்கப்படும். ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டதன் பின் அவ்விதமான போலியான அல்லது பிழையான தகவலொன்று சமர்ப்பிக்கப்பட்டதாக கண்டுபிடிக்கப்பட்டால் அதற்குரிய செயலாற்றுகைக்கு அமைய சேவையிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

9. அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு இவ் வெற்றிடங்களை நிரப்புவதற்கும் நிரப்பாதிருப்பதற்கும் உரிமை உண்டு.

10. இந்த அறிவித்தலின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிப்பதங்களுக்கிடையில் ஏதேனும் முரண்பாடுகள் ஏற்படும் சந்தர்ப்பங்களில், சிங்கள மொழிப் பதங்களே மேலோங்கி நிற்கும்.

*அரச சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளையின் பேரில்,*
*சட்டமா அதிபர்.*

உயர் நீதிமன்ற கட்டிடத்தொகுதி,
சட்டமா அதிபர் திணைக்களம்,
கொழும்பு 12,
2018, ஏப்பிறல் 20.

05-122

---

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சு**

இலங்கை-ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவகம் - மொரட்டுவை

**தேசிய தொழில் பயிலுனர் திட்டத்தின் கீழ் முழுநேரப் பயிற்சி நெறிக்கான அனுமதி - 2018**

கீழ்க்காணும் ஆகக்குறைந்த தகைமைகளையுடைய ஆண்/பெண் இருபாலாரிடமிருந்து 2018 ஆம் ஆண்டு அனுமதிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தேவையான ஆகக் குறைந்த தகைமைகள் வருமாறு :-

1. (அ) **வயது**.- 2018.03.31 ஆந் திகதியன்று 16 வயதிற்கும் 22 வயதிற்கும் இடைப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஆ) **கல்வி**.- க. பொ. த. (சா. த.) பரீட்சையில் தமிழ் அல்லது சிங்களம் (போதனாமொழி), கணிதம் உட்பட 6 பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அல்லது

இலண்டன் சாதாரண தரப் பரீட்சையில் ஆங்கில மொழி, கணிதம் உட்பட 6 பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**விசேட திறமை**.- மின்சாரவியல்/இலத்திரனியல்/இயந்திரவியல் துறைகளில் புதிய கண்டுபிடிப்புகளில் ஈடுபட்டு தேசிய/ மாகாண மட்டத்தில் இலங்கை புத்தாக்குநர் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட முதல் மூன்று இடங்களில் ஒன்றினைப் பெற்ற சான்றிதழுடன் (ஆ) கல்வித் தகைமையினை இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் பெற்றிருத்தல் வேண்டும்.

(இ) தேசிய தொழில் பயிலுநர் தொழிற்பயிற்சி அதிகார சபையில் 3 அல்லது அதற்கு மேற்பட்ட வருடங்களுக்கான பயிற்சியினைப் பெறுவோர் விண்ணப்பிப்பதற்கு தகுதியுடையோர் அல்லர்.

2. **பயிற்சி போதனைகள்**.- சிங்களத்தில் எல்லாப் பாடநெறிகளும், மோட்டார் இயந்திரவியல் பாடநெறி மாத்திரம் தமிழிலும் நடத்தப்படும். சிங்கள மொழியறிவுள்ள தமிழ் மாணவர்கள் மற்றைய பாடநெறிகளையும் கற்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படும். (ஆ) இலண்டன் சாதாரண தர பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் தமிழ் அல்லது சிங்கள மொழி மூலம் பயிற்சி பெறும் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3. **நுழைவுத் தேர்வு**.- தேவையான தகைமைகளையுடைய, கீழே 4 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சைக் கட்டணங்கள் செலுத்திய விண்ணப்பதாரிகள் மட்டும் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

*(அ) பரீட்சைக்கான மொழி.*- தமிழ் /சிங்களம்.

*(ஆ) பரீட்சை நிலையம்*.- அனுமதிக்கான எழுத்துமூலப் பரீட்சை கொழும்பு, கண்டி, காலி, பதுளை, அநுராதபுரம், வவுனியா ஆகிய பரீட்சை நிலையங்களில் நடைபெறும். (போதியளவு பரீட்சார்த்திகள் இல்லாத நிலையங்களில் பரீட்சை இரத்துச்செய்யப்பட்டு அவர் விரும்பும் வேறு பரீட்சை நிலையத்தில் பரீட்சை எழுத அனுமதிக்கப்படுவர்.)

*எழுத்துமூலப் பரீட்சை*.- கணிதம், அடிப்படைத் தொழில்நுட்ப அறிவு, பொது அறிவு, ஆங்கிலம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட 2 வினாப்பத்திரங்களுக்கு விடையளித்தல் வேண்டும்.

4. **பரீட்சைக் கட்டணம்**.- விண்ணப்பதாரிகள் 500 ரூபாவை ஏதாவதொரு இலங்கை வங்கிக் கிளையில், கணக்கு இலக்கம் 681490, கணக்காளர், இலங்கை ஜேர்மன் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனம் மொரட்டுவைக் கிளைக்கு வைப்பிலிட்டு அதற்கான பற்றுச்சீட்டின் பிரதியை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். அழிந்துபோன அல்லது வேறு மாற்றங்கள் செய்யப்பட்ட பற்றுச்சீட்டுக்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. பற்றுச்சீட்டு இணைக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

அனுமதிப் பரீட்சைக்குத் தோற்றாத காரணத்தினாலோ அல்லது வேறு எந்தக் காரணத்தினாலோ பரீட்சைக் கட்டணம் மீளளிக்கப்படமாட்டாது என்பதை விசேடமாகக் கவனத்திற்கொள்க.

5. **ஆரம்பத் தேர்வு முறை**.- எழுத்து மூலப்பரீட்சையில் ஆகக்கூடிய புள்ளிகளைப் பெறுபவர்கள் மத்தியிலிருந்து திறமை அடிப்படையில் தகைமையுடையவர்கள் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவர். பின்தங்கிய மாவட்டங்களின் வெட்டுப்புள்ளி குறைக்கப்பட்டுள்ளது. (இவ்வெட்டுப்புள்ளி இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடைமுறைக்கேற்ப தீர்மானிக்கப்படும்.)

6. **இறுதித் தேர்வு முறை**.- நேர்முகப் பரீட்சைக்கு முன்பதாக செயல்முறைப் பரீட்சையொன்றுக்கு உட்படுத்தப்படுவர். செயல்முறை பரீட்சையின் 40% உம் நேர்முக பரீட்சையின் 60% உம் புள்ளிகளாக வழங்கப்படும். விளையாட்டு போன்ற சிறப்புத் தகைமைகள் இருந்தால் அவைகள் கவனத்தில் கொள்ளப்படும். பயிற்சிக்கு தெரிவு செய்யப்படுவோர் வைத்திய பரீட்சைக்கு உட்படுத்தப்படுவர். இதில் சித்தியடையாதோர் பயிற்சியிலிருந்து நீக்கப்படுவர்.

7. **பயிற்சி நெறி :**

| | |
|---|---|
| மோட்டார் இயந்திரவியல் | - 04 ஆண்டுகள் |
| மில்றைற்/வார்ப்பியல் | - 04 ஆண்டுகள் |
| காற்று பதனமாக்கல்/குளிரூட்டல் | - 03 1/2 ஆண்டுகள் |
| வலு மின்சாரவியல் | - 03 1/2 ஆண்டுகள் |
| ஆயுத இயந்திரவியல் | - 03 1/2 ஆண்டுகள் |
| மெக்காற்றோனிக் (கைத்தொழில்) | - 03 1/2 ஆண்டுகள் |
| வாகன மின்சாரவியல் | - 03 ஆண்டுகள் |
| டீசல் இயந்திரவியல் | - 03 ஆண்டுகள் |
| வாகன காற்று பதனமாக்கல்/ குளிரூட்டல் | - 03 ஆண்டுகள் |
| உருக்கியிணைத்தல் | - 03 ஆண்டுகள் |
| வாகன உடல் திருத்தலும் வர்ணம் தீட்டுதலும் | - 03 ஆண்டுகள் |

முதலாம் வருடம் நடத்தப்படும் அடிப்படை பயற்சியின் முடிவில் நடைபெறும் தொழிற்றுறை தேர்வு பரீட்சையில் பெறப்படும் புள்ளிகளையும், ஆற்றல்களையும் அடிப்படையாகக் கொண்டே உமக்கான தொழிற்றுறை தெரிவுசெய்யப்படும்.

8. **பிணை முறிகைச்சாத்திடல்**.- 4, 3 1/2, 3 வருட பயிற்சிக்கு தெரிவுசெய்யப்படுவோர் இ.ஜே.தொ.ப. நிறுவகத்துடனும் தேசிய தொழிற்பயிற்சி அதிகாரசபையுடனும், பயிற்சியினை திருப்திகரமாக பூர்த்தி செய்வேனென உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திடுதல் வேண்டும். அத்துடன் பயிற்சியின் பின்னர் கேட்டுக்கொள்ளப்பட்டால் இலங்கைப் போக்குவரத்து சபையில் குறைந்தது இரண்டு வருடங்கள் பணியாற்றுவேனெனவும் பிணைமுறி ஒன்றில் கைச்சாத்திடுதல் வேண்டும்.

9. கீழ்க்காணும் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கேற்ப (ஏ4) அளவில் விண்ணப்பம் தயாரிக்கப்பட்டு, அதனுடன்-

(அ) பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் ;
(ஆ) கல்விச் சான்றிதழ் ;
(இ) இலக்கம் 1 இல் குறிப்பிடப்பட்டதற்கிணங்க இலங்கை புத்தாக்கங்கள் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட சான்றிதழ் ஆகிய ஆவணங்களின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்.

தபால் உறையின் இடப்பக்க மேல் மூலையில் "முழுநேர பயிற்சிநெறிக்கு பயிலுனர்களைச் சேர்த்தல் 2018" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

**விண்ணப்பப் படிவத்தினைப் பெற்றுக் கொள்ளல்.**

◊ www.cgtti.lk என்னும் இணையத் தளத்திலிருந்தும்,
◊ நிறுவகத்திற்குச் சமுகமளிப்பதன் மூலம்,
◊ பெயர் விலாசமிடப்பட்ட முத்திரையுடனான தபாலுறையினை நிறுவகத்திற்கு அனுப்புவதன் மூலம்.

10. **விண்ணப்ப முடிவுத் திகதி**.- விண்ணப்பங்கள் 2018.06.22 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்பதாக, முகாமையாளர்-மனித வளமும் நிர்வாகமும் அவர்களுக்குக் கிடைக்கக்கூடியதாக கீழேயுள்ள முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

11. **பரீட்சை அனுமதிப்பத்திரம்**.- தகைமையுள்ள பரீட்சார்த்தி களுக்கு 2018.08.10 ஆந் திகதியளவில் பரீட்சை அனுமதிப்பத்திரம் அனுப்பிவைக்கப்படும். மேற்படி பத்திரம் கிடைக்கப்பெறாதோர் இத்தினத்திலிருந்து 14 நாட்களுக்குள் கீழேயுள்ள தொலைபேசி இலக்கத்தினூடாக தொடர்புகொள்க.

முகாமையாளர்,
மனித வளமும் நிர்வாகமும்,
இலங்கை - ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவகம்.

இலங்கை - ஜேர்மன் தொழில் நுட்ப பயிற்சி நிறுவகம்,
இல. 582, காலி வீதி,கல்கிசை.
(அங்குலானை சந்திக்கு அருகில்)
தொலைபேசி இல. : 011-2605625.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை-ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவகம் - மொரட்டுவை**

தேசிய தொழில் பயிலுனர் திட்டத்தின் கீழ் முழுநேரப் பயிற்சி நெறிக்கான அனுமதி - 2018

| அலுவலக உபயோகத் திற்காக | Q | DQ | பரீட்சை இல. | | | | | | நேர்முகப் பரீட்சை இல. | | பயிலுனர் இல. | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|

* ஆங்கிலத்தில் நிரப்பும்போது ஆங்கில பெரிய எழுத்துக்களை உபயோகிக்கவும்.
* கீழே (*) காட்டப்பட்டுள்ள இடத்தில் பொருத்தமான கூட்டினுள் ( ✓ ) எனும் அடையாளத்தினை இடவும்.

1. (அ) முழுப் பெயர் (தமிழில்) : ________________

(ஆ) முழுப் பெயர் (ஆங்கிலத்தில்) : ________________

(இ) முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கிலத்தில்) : ________________

2. (அ) தபால் முகவரி (தமிழில்) : ________________

(ஆ) தபால் முகவரி (ஆங்கிலத்தில்) :

(இ) மாவட்டம் : (ஈ) பிரதேச செயலகப் பிரிவு : (உ) மாகாணம்

(ஊ) மின் அஞ்சல் முகவரி : (எ) தொலைபேசி இலக்கம் : நடமாடும் / வதிவிடம்

3. (அ) பிறந்த திகதி : ஆண்டு மாதம் திகதி

(ஆ) 2018.03.31 ஆந் தினத்தில் வயது : வருடங்கள் மாதங்கள் நாட்கள்

(இ) தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :

(ஈ) ஆண்/ பெண் (*) ஆண் பெண்

4. கல்வித் தகைமை: க. பொ. த. (சா. த.) :

| சுட்டெண் | வருடம் |
|---|---|
| பாடம் | தரம் |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

இரண்டாவது அமர்வில் (விசேட திறமைக்கான சான்றிதழ் உள்ள விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரம்):

| சுட்டெண் | வருடம் |
|---|---|
| பாடம் | தரம் |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

5. விசேட திறமை அடிப்படையில் விண்ணப்பித்தால், இலங்கை புத்தாக்கங்கள் ஆணைக்குழுவினால் மாவட்ட/ தேசிய மட்டத்தில் சான்றிதழ் வழங்கப்பட்ட வருடமும் துறையும் :

வருடம் துறை

6. (அ) பிரவேசப் பரீட்சை எழுத விரும்பும் மொழி (*) சிங்களம் தமிழ்

(ஆ) பிரவேசப் பரீட்சை எழுத விரும்பும் பரீட்சை நிலையம் (*)

| கொழும்பு | கண்டி | காலி | பதுளை | அனுராதபுரம் | வவுனியா |
|---|---|---|---|---|---|
| | | | | | |

7. (அ) கட்டணம் செலுத்திய இலங்கை வங்கிக் கிளை (ஆ) திகதி

என்னால் வழங்கப்பட்ட மேற்கூறிய விபரங்கள் அனைத்தும் உண்மையானவையும் சரியானவையும் என இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இவ்விபரங்களில் ஏதாவது பொய்யானவையென தெரிவின் முன்போ பின்போ கண்டுபிடிக்கப்பட்டால் தகைமையற்றவனாகக் கருதப்படவோ அல்லது பயிற்சியிலிருந்து நீக்கப்படுவதற்கோ ஏதுவாவேன் என்பதையும் அறிவேன்.

திகதி விண்ணப்பதாரியின் கையொப்பம்.

அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்

| | | |
|---|---|---|
| (அ) வங்கியின் பற்றுச்சீட்டு | ஆம் | இல்லை |
| (ஆ) கல்விச் சான்றிதழ்களின் பிரதிகள் | ஆம் | இல்லை |
| (இ) பிறப்புச் சான்றிதழின் பிரதி | ஆம் | இல்லை |
| (ஈ) இல. 5 இன் கீழ் விசேட திறமைகளுக்கான சான்றிதழின் பிரதி | ஆம் | இல்லை | பொருந்தவில்லை |
| (உ) வயதெல்லை | -16 | OK | 22+ |
| (ஊ) நுழைவுத்தேர்வுக்குத் தகுதி பெற்றுள்ளாரா? | ஆம் | இல்லை |
| (எ) பரீட்சித்தவர் | | |

5-13

---

திருத்தம்

**பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு**

இலங்கைத் தகவல், தொடர்பாடல், தொழில்நுட்ப சேவையில் வகுப்பு 3 தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2018

2018.04.20 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் மேற்கூறப்பட்ட பரீட்சை அறிவித்தலில், 6.0 பந்தியில் அறிவித்த "இப்பதவி நிரந்தரமானது, இப்பரீட்சையில் இலங்கைத் தகவல், தொடர்பாடல், தொழில்நுட்பச் சேவையின் வகுப்பு 3 தரம் III இற்கு ஆட்சேர்ப்பது தொடர்பாக பின்வரும் தகைமைகள் ஏற்புடையனவாகும்" என்பது பின்வருமாறு திருத்தப்படுகின்றது.

6.0 இப்பதவி நிரந்தரமானது. இப்பரீட்சையில் இலங்கைத் தகவல் தொடர்பாடல், தொழில்நுட்பச் சேவையின் வகுப்பு 3 தரம் III தரத்திற்கு ஆட்சேர்க்கப்படும் அலுவலர்க்குரிய ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக அரசினால் பின்னர் எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானத்துக்கு கட்டுப்படல் வேண்டும்.

**குறிப்பு** : இத் திருத்தம் காரணமாக விண்ணப்பப்படிவம் விண்ணப்பிக்கும் இறுதித் திகதி நீடிக்கப்படமாட்டாது.

கே. வீ. பி. எம். ஜே. கமகே,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்,
பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு,

சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
2018, ஏப்பிறல் 23.

05-184

---

# பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

## கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

**இலங்கைப் புகையிரத சேவைகள்**
**பெறுகை அறிவித்தல்**

06 எண்ணிக்கையான அச்சாணிகளைப் பரீட்சிப்பதற்கான
A- SCAN, PULES ECHO TYPE ULTRA SONIC FLAW DETECTOR
கருவிகளுக்கான பெறுகை

பெறுகை இல.: SRS / F 7502

1. இலங்கைப் புகையிரத சேவைகள், திணைக்கள பெறுகைக்குழுவின் தவிசாளர் , 06 எண்ணிக்கையான அச்சாணி களைப் பரீட்சிப்பதற்கான A-SCAN, PULES ECHO TYPE ULTRA SONIC FLAW DETECTOR கருவிகளை இலங்கைப் புகையிரத சேவைக்கு வழங்குவதற்காக முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களைத் தயாரிப்பாளர்கள்/வழங்குநர்களிடமிருந்து பெற்றுக்கொள்வார். வழங்கப்படும் பொருட்களுக்கான உற்பத்தியாளர்களின் அங்கீகாரக் கடிதம் விலைமனுவுடன் வழங்கப்படல் வேண்டும். வெளிநாட்டு விலைமனுதாரர்கள் அவர்களது இலங்கை ஒப்பந்தங்கள் பதிவாளரிடம் பதிவைப் பெற்றுள்ள அற்றோணித்தத்துவம் அளிக்கப்பட்டவர்களுக்குமான அதிகாரமளிக்கப்பட்ட உள்நாட்டு முகவர்களின் ஊடாகச் சமர்ப்பிக்கலாம்.

2. 2018.05.31ஆந் திகதியன்று பி.ப.2.00 மணிக்கு ( இலங்கை நேரப்படி) விலைமனுக்கள் ஏற்கும் காலம் முடிவுறும்.

3. இலங்கை ரூபாவில் ஐயாயிரத்து முந்நூறு ( ரூபா 5,300) ரூபாவை மீளளிக்கப்படாத கட்டணமாகச் செலுத்துவதன் பேரில் 2018. 04.18 ஆந் திகதி முதல் 2018.05.30 ஆந் திகதி வரையில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் ( இலங்கை நேரம்) இலங்கையில் கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத சேவைகள் களஞ்சிய அத்தியட்சகரின் அலுவலகத்திலிருந்து பெறப்படக்கூடியதான படிவங்களில் மட்டுமே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். வெளிநாட்டு விலைமனுதாரர்கள் இலங்கை ரூபாவில் ஐயாயிரத்து முந்நூறு ( ரூபா 5,300.00) ரூபாவை அல்லது அதற்குச் சமமானதும் இலகுவில் மாற்றக்கூடியதுமான வெளிநாட்டு நாணயத்தை தங்களது நாட்டின் இலங்கைத் தூதுரகத்திற்குச் செலுத்தி கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத சேவைகள் களஞ்சிய அத்தியட்சகரிடம் மேற்குறிப்பிடப்பட்ட நாட்களில் தங்களின் தூதுரகத்தின் ஊடாக விலைமனுக்களை விநியோகிக்கும் படி கோரலாம். பெறுகைக் கட்டணமாக இலங்கை ரூபாவில் ஐயாயிரத்து முந்நூறு ( ரூபா 5,300.00) ரூபா அல்லது அதற்குச் சமமானதும் இலகுவில் மாற்றக்கூடியதுமான வெளிநாட்டு நாணயம்) மீளளிக்கப்பட மாட்டாது.

4. இலங்கை , கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, இலங்கைப் புகையிரத சேவைகள் அத்தியட்சகர் அலுவலகத்தில் வைத்து விலைமனுக்களை ஏற்கும் காலம் முடிவடைந்ததும் உடனடியாகவே அவை திறக்கப்படும். விலை கூறுநர்கள் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அவர்களின் பிரதிநிதிகள் விலைமனுக்கள் திறக்கப்படும் சமயத்தில் அங்கு சமுகமளிக்கும்படி கோரப்படுகின்றனர்.

05. முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை பதிவஞ்சல் மூலமாகவோ அல்லது நேரில் ஒப்படைப்பதன் மூலமாகவோ பின்வருபவருக்குக் கிடைக்கச் செய்தல் வேண்டும்.

தவிசாளர்,
திணைக்கள பெறுகைக் குழு( உயர்மட்டம்),
இலங்கைப் புகையிரத சேவைகள் ,
இலங்கைப் புகையிரத சேவைகள் அத்தியட்சகர் அலுவலகம்,
ஒல்கொட் மாவத்தை,
கொழும்பு 10.

6. விலைமனுஆவணங்களை இலங்கை, கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத சேவைகள் களஞ்சியசாலைகள் அத்தியட்சகரின் அலுவலகத்தில் இலவசமாகப் பார்வையிட முடியும்.

7. மேலதிக தகவல்களுக்குத் தொடர்பு கொள்ளவும்.-
தொலைபேசி இலக்கங்கள் : 94 (11) 2438078 அல்லது 94 (11) 2436818
தொலை நகல் இலக்கம் : 94(11) 2432044
மின்னஞ்சல் : srs. slr @ gmail. com
இணையத்தளம் : www.railway.gov.lk

தவிசாளர்,
திணைக்களப் பெறுகைக் குழு (உயர் மட்டம்),
இலங்கைப் புகையிரத சேவைகள்.

குறிப்பு இல. SRS/F. 7502

5- 35

---

## ஆய விற்பனையும் குத்தகையும்

**மஹவெவ பிரதேச செயலாளர் பிரிவு**

2018 ஆம் ஆண்டு ஆடி மாதம் 1 ஆந் திகதி முதல் 2019 ஆம் ஆண்டு ஆனி மாதம் 30 ஆந் திகதி வரை கள்ளுத் தவறணை குத்தகை விற்பனை - 2018/2019

2018, ஆடி மாதம் 01 ஆந் திகதி முதல் 2019, ஆனி மாதம் 30 ஆந் திகதி வரையுள்ள காலப்பகுதியில் கள்ளுத்தவறணை சில்லறை விற்பனைக்காக 1982 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் வெளியான கள்ளு வரியை விற்கும் நிபந்தனைகளுக்கு அமைவாக கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிடும் கள்ளுத் தவறணைக்கான கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. சகல கேள்விப்பத்திரங்களும் எந்தவொரு பிரதேச செயலகத்திலும் பெற்றுக்கொள்ளக்கூடிய உரிய படிவத்தில் கேள்வியைச் சமர்ப்பிக்கப்படுவதுடன் கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கேள்விப்பத்திர வைப்புப் பணம் வைப்பிலிட்டமைக்கான பற்றுச்சீட்டும் குறிப்பிட்ட கேள்விப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட விலையின் 15% க்குப் பெற்றுக்கொள்ளப்பட்ட பெறுமதி அத்தாட்சிப்பத்திரமும் இணைக்கப்படல் வேண்டும்.

3. முறையாக நிரப்பப்பட்ட சகல கேள்விப்பத்திரங்களும் பொறியிடப்பட்டு கடித உறையிலிட்டு இடது பக்க மேல் மூலையில் ®@.............இல. ............கள்ளுத் தவறணைக்கான கேள்வி " என்று குறிப்பிட்டு 2018.05.23 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு முன்பதாக மஹவெவ பிரதேச செயலாளருக்குக் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும். அல்லாதவிடத்து அக்குறிப்பிட்ட நேரத்திற்கு முன்பு மஹவெவ பிரதேச செயலகத்தில் உள்ள கேள்விப்பத்திர பெட்டியில் இடுதல் வேண்டும்.

4. கேள்விப் பத்திரங்கள் தாக்கல் செய்வது 1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத் தவறணைகளை குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கு அமைய இருத்தல் வேண்டும்.

5. 2018.05.23ஆந் திகதி மு.ப. 10.30. மணிக்கு கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் காலம் முடிவடைந்த உடனே எல்லா கேள்விப்பத்திரங்களும் திறக்கப்படும்.

6. மேற்குறிப்பிடப்பட்ட தினத்தில் விற்பனையாகாமல் தவறணைகள் ஏதும் இருப்பின் அவற்றுக்கான மீள் விற்பனை 2018.06.13ஆந் திகதி மு.ப.10.30 மணிக்கு நடைபெறும். அன்றைய தினம் கேள்விப்பத்திரங்கள் தாக்கல் செய்வது இந்த வர்த்தமானி அறிவித்தலுக்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும் . இது பற்றிய மேலதிக விபரங்களை மஹவெவ பிரதேச செயலாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

எம். டி. நந்தசிறி,
பிரதேச செயலாளர்,
மஹவெவ.

பிரதேச செயலகம்,
மஹவெவ,
2018, ஏப்பிறல் 04.

**அட்டவணை**

| தவறணையின் இல. | கிராமம் | கேள்விப்பத்திர வைப்புப் பணம் ரூபா ச. |
|---|---|---|
| 18 | தொடுவாவ - தெற்கு | 1,000 0 |
| 17 | மட்டகொட்டுவ | 500 0 |
| 16 | அடப்பரகம | 500 0 |

5- 15

---

**ஆரச்சிக்கட்டுவ பிரதேச செயலாளர் பிரிவு**

2018 யூலை முதல் 2019 யூன் வரை கள்ளுத் தவறணை குத்தகை விற்பனை

**எனது இலக்கம்: ARA/ ADM/ ADMIN/6/7/5**

2018, யூலை மாதம் 01 ஆந் திகதி முதல் 2019, யூன் மாதம் 30 ஆந் திகதி வரையுள்ள காலப்பகுதியில் சில்லறையாக கள்ளு விற்பனை செய்வதற்காக 1982 , ஓகத்து 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத்தவறணைகளை குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கு அமைவாக இத்துடன் கீழே காட்டப்பட்டுள்ள அட்டவணையின் படி கள்ளுத்தவறணை விற்பனைக்காக குறிக்கப்பட்டுள்ள நிபந்தனைக்கு அமைவாக கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. சகல கேள்விப்பத்திரங்களும் எந்தவொரு பிரதேச செயலகத்திலும் பெற்றுக்கொள்ளக்கூடிய உரிமைப் படிவங்களில் கேள்வியைச் சமர்ப்பிப்பதுடன் கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களுக்கு அமைய கேள்விப் பத்திரத்திற்கான பணம் வைப்புச் செய்தமைக்காக பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டும் சம்பந்தப்பட்ட கேள்விப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பத்தொகையில் 15 % பெறுமதியுள்ள அத்தாட்சி சான்றிதழும் இணைக்கப்படல் வேண்டும்.

3. உரிய முறையில் பூரணப்படுத்தப்பட்ட சகல கேள்விப்பத்திரங்களும் பெயரிடப்பட்ட உறையிலிட்டு இடது பக்க மேல் மூலையில் ............. இலக்கம் கள்ளுத் தவறணைக்காக , கேள்விப்பத்திரங்கள் கீழ்க் காட்டப்பட்டுள்ள அட்டவணையின் படி தவறணையின் பெயரும் இலக்கமும் தெளிவாகக் குறிப்பிடப்பட்டு 2018.05.18 ஆந் திகதி காலை 10.30 மணிக்கு முன்பு ஆராச்சிக்கட்டுவ பிரதேச செயலாளருக்கு கிடைக்கும் முகமாக பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படுதல் வேண்டும். அல்லது மேற்குறிப்பிட்ட திகதிக்கு முன் கிடைக்கக்கூடியதாக ஆரச்சிக்கட்டுவ பிரதேச செயலகத்தில் உள்ள கேள்விப்பத்திர பெட்டியினுள் இட வேண்டும்.

4. கேள்விப் பத்திரங்கள் 1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத் தவறணைகளை குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கு அமைய இருத்தல் வேண்டும்.

5. 2018.05.18 ஆந் திகதி காலை 10.30. மணிக்கு கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்த உடனேயே எல்லா கேள்விப்பத்திரங்களும் திறக்கப்படும். அத்தருணம் கேள்விப்பத்திர கோரிக்கையாளர்கள் அப் பிரதேச செயலகத்திற்கு சமுகமளித்தல் வேண்டும். குறித்த திகதியில் விற்கப்படாத தவறணைகள் 2018.06.05 ஆந் திகதி முற்பகல் 10.30 மணியளவில் மறுவிற்பனைக்காக விடப்படும். அன்றைய தினம் ஏல முன்வைப்பு குறித்த வர்த்தமானியின் பிரமாணங்களுக்கு அமைவாக இடம்பெறும்.

6. இது தொடர்பான மேலதிக விபரங்களை ஆரச்சிக்கட்டுவ பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

டபிள்யூ. ஆர்.ஏ.என். எஸ். விஜயசிங்ஹ,
பிரதேச செயலாளர்,
ஆரச்சிக்கட்டுவ.

**அட்டவணை**

| பிரிவு | கிராமம் | தவறணை இலக்கம் | கேள்விப் பத்திரங்கள் ஏற்கும் இறுதித் திகதியும் நேரமும் | கேள்விப் பத்திர வைப்புப் பணம் ரூபா |
|---|---|---|---|---|
| ஆரச்சிக்கட்டுவ | கறுக்குப்பனை | 10 | 2018.05.18 மு.ப.10.30 | 1,000.0 |
| ஆரச்சிக்கட்டுவ | ஆரச்சிக்கட்டுவ | 11 | 2018.05.18 மு.ப.10.30 | 1,000.0 |
| ஆரச்சிக்கட்டுவ | பத்துளுஓய | 12 | 2018.05.18 மு.ப.10.30 | 1,000.0 |

5- 31

---

**மாதம்பை பிரதேச செயலாளர் பிரிவு**

2018 , யூலை மாதம் முதல் 2019, யூன் மாதம் வரை
கள்ளுத் தவறணை விற்பனையும் குத்தகை விற்பனையும் 2018- 2019

2018, யூலை மாதம் 01 ஆந் திகதி முதல் 2019, யூன் மாதம் 30 ஆந் திகதி வரையுள்ள காலப்பகுதிக்கு இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் உள்ள கள்ளுத்தவறணைகள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தகைகளுக்கு அமைய சில்லறையாக கள்ளு விற்பனை செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

(அ) தற்போது அமுலில் இருக்கும் எல்லா அனுமதிப்பத்திரங்களுக்கும் பொது நிபந்தனைகளும் ஏற்புடையதாகும்.
(ஆ) 1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் ஆய விற்பனையும் குத்தகையும் பகுதியின் நிபந்தனைகளுக்கமைவானதாகும்.

2. எந்தவொரு பிரதேச செயலகத்திலும் பெற்றுக்கொள்ளக்கூடிய உரிய படிவத்தில் கேள்வியைச் சமர்ப்பிக்கப்படுவதுடன் கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களுக்கமைய வைப்புப்பணமாக மாதம்பை பிரதேச செயலகத்தில் செலுத்துவதற்கான பற்றுச்சீட்டையும் விண்ணப்பிக்கும் தொகையில் 15% பெறுமதியுள்ள அத்தாட்சி சான்றிதழும் இணைக்கப்படல் வேண்டும்.

3. கேள்விப் பத்திரங்களை முறையாக பொறியிடப்பட்ட கடித உறையிலிட்டு இடது பக்கத்தில் தவறணையின் பெயரும் இலக்கமும் பின்வருமாறு ®@ 13 ஆம் இலக்கமுள்ள பம்பல கள்ளுத்தவறணைக் கேள்விப்பத்திரம்'' எனக் குறிப்பிடப்பட்டு 2018.05.25ஆந் திகதி காலை 10.30 மணிக்கு முன்பு மாதம்பை பிரதேச செயலகத்தில் உள்ள கேள்விப்பத்திர பெட்டியில் இடுதல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் மேற்குறிப்பிடப்பட்ட நேரம், திகதிக்கு முன் கிடைக்கக்கூடியதாய் பிரதேச செயலாளர், பிரதேச செயலகம், மாதம்பை என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

4. கேள்விப் பத்திரங்கள் 1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத் தவறணைகளை குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கு அமைய செயற்படல் வேண்டும்.

5. 2018, மே 25 ஆந் திகதி காலை 10.30 மணிக்கு கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்த உடனே எல்லா கேள்விப்பத்திரங்களும் திறக்கப்படும். அந்த நேரம் மனுதாரர் அனைவரும் இச் செயலகத்திற்கு சமுகமளித்தல் வேண்டும்.

6.மேற்குறிப்பிடப்பட்ட தினத்தில் விற்பனையாகாமல் தவறணைகள் ஏதும் இருப்பின் அவற்றுக்கான மீள் விற்பனை 2018.06.12ஆந் திகதி காலை 10.30 மணிக்கு இவ்வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளுக்கு அமைய நடைபெறும்.

இது தொடர்பாக மேலதிக விபரங்கள் மாதம்பை பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

எச்.எம்.எஸ். பீ. ஹேரத்,
பிரதேச செயலாளர்,
மாதம்பை.

பிரதேச செயலகம்,
மாதம்பை,
2018, ஏப்பிறல் 18.

**அட்டவணை**

| இல. | பகுதி | கிராமம் | தவறணை கேள்விப்பத்திரம் ஏற்கும் நேரமும் இறுதித் திகதியும் | கேள்விப்பத்திர வைப்புப் பணம் ரூபா ச. |
|---|---|---|---|---|
| 1. | பிட்டிகல் கோரளை பம்பல வடக்கு | பம்பல | 2018.05.25 காலை 10.30 மணி | 1,000.00 |

5- 98

---

**முந்தல் பிரதேச செயலாளர் பிரிவு**

2018.07.01 ஆந் திகதி தொடக்கம் 2019.06.30 ஆந் திகதி வரை
கள்ளுத் தவறணை குத்தகை விற்பனை

2018, யூலை மாதம் 01 ஆந் திகதி முதல் 2019 யூன் மாதம் 30 ஆந் திகதி வரையுள்ள காலப்பகுதியினுள் கீழ் வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள கள்ளுத்தவறணைகளில் 1982, ஓகத்து 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளாவாறான கள்ளுத்தவறணைகளை குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கு அமைவாகவும் மற்றும் சகல கலால் அனுமதிப்பத்திரங்களுக்கமைவான நிபந்தனைகளுக்கு உட்பட்ட வகையிலும் சில்லறையாக கள்ளு விற்பனை செய்வதற்கான குத்தகை கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

2 முந்தல் பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளக்கூடிய உரிய விண்ணப்பப்படிவங்களில் கேள்விகளை சமர்ப்பிக்கப்படுவதுடன் கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களுக்கு அமைய வைப்புத் தொகைப் பணத்தை முந்தல் பிரதேச செயலகத்தில் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டும் விண்ணப்பிக்கும் தொகையில் 15 % பெறுமதியான ஆதன பெறுமதிச் சான்றிதழும் இணைக்கப்படல் வேண்டும்.

3. கேள்விப் பத்திரங்களை முறையாக முத்திரையிடப்பட்ட உறையிலிட்டு இடது பக்க மேல் மூலையில் கள்ளுத் தவறணையின் பெயரும் இலக்கமும் பின்வருமாறு ®@.............................. இலக்கமுள்ள ........................ கள்ளுத்தவறணைக்குரிய கேள்விப்பத்திரம்'' எனக் குறிக்கப்படல் வேண்டும். கள்ளுத்தவறைணை கேள்விப்பத்திரம் 2018.05.24 ஆந் திகதி காலை 10.30 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக முந்தல் பிரதேச செயலாளருக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அல்லது மேற்குறிப்பிட்ட காலத்திற்குள் முந்தல் பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திரப் பெட்டியினுள் இடப்படல் வேண்டும்.

4. கேள்விப் பத்திரங்கள் 1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத் தவறணைகளை குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கு அமைய இருத்தல் வேண்டும்.

5. 2018.05.24 ஆந் திகதி காலை 10.30 மணிக்கு கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்த உடனே எல்லா கேள்விப்பத்திரங்களும் திறக்கப்படும். அத்தருணம் கேள்விப்பத்திர கோரிக்கையாளர்கள் முந்தல் பிரதேச செயலகத்திற்கு சமுகமளித்தல் வேண்டும்.

6. முன்னர் குறிப்பிட்ட திகதியில் விற்பனை செய்ய முடியாது போன கள்ளுத் தவறணைகள் 2018.06.14 ஆந் திகதி மு.ப.10.30 மணிக்கு மீண்டும் விற்பனை செய்யப்படும். அத்தினத்திற்கு கேள்விப்பத்திரங்கள் முன்வைத்தல் முன்னர் குறிப்பிட்ட வர்த்தமானி அறிவித்தலுக்கு இணங்க நடைபெறும்.

7. இது தொடர்பான மேலதிக விபரங்களை முந்தல் பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி இல. 032- 2052271.

ஏ.எம்.சீ.எம். பிரேமசூரிய,
பிரதேச செயலாளர்,
முந்தல்.

பிரதேச செயலகம்,
முந்தல்,
2018,ஏப்பிறல் 18.

**அட்டவணை**

| தொ. இல. | பிரதேச செயலாளர் பிரிவு | கிராமம் | தவறணை திறக்கும் நேரம் | தவறணை மூடும் நேரம் | தவறணை கேள்விப் பத் திரம் ஏற் கும் இறுதித் திகதியும் நேரமும் | கேள்விப்பத்திர வைப்புப் பணம் ரூபா ச. |
|---|---|---|---|---|---|---|
| 1. | முந்தல் | முந்தல் | காலை 11.00 மணி<br>பி.ப.5.00 மணி | பி.ப.2.00 மணி<br>இரவு 8.00 மணி | மு.ப.10.30 மணி 2018.05.24 | ரூ.1,000.0 |
| 2. | முந்தல் | மதுரங்குளி | காலை 11.00 மணி<br>பி.ப.5.00 மணி | பி.ப.2.00 மணி<br>இரவு 8.00 மணி | மு.ப.10.30 மணி 2018.05.24 | ரூ.1,000.0 |

| தொ. இல. | பிரதேச செயலாளர் பிரிவு | கிராமம் | தவறணை திறக்கும் நேரம் | தவறணை மூடும் நேரம் | தவறணை கேள்விப் பத்திரம் ஏற்கும் இறுதித் திகதியும் நேரமும் | கேள்விப்பத்திர வைப்புப் பணம் ரூபா ச. |
|---|---|---|---|---|---|---|
| 3. | முந்தல் | முக்கு தொடுவாவ | காலை 11.00 மணி பி.ப.5.00 மணி | பி.ப.2.00 மணி இரவு 8.00 மணி | மு.ப.10.30 மணி 2018.05.24 | ரூ.1,000.0 |
| 4. | முந்தல் | உடப்பு | காலை 11.00 மணி பி.ப.5.00 மணி | பி.ப.2.00 மணி இரவு 8.00 மணி | மு.ப.10.30 மணி 2018.05.24 | ரூ.1,000.0 |

5- 109

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

### அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ் கூட்டிணைக்கப்படல் தொடர்பான பகிரங்க அறிவித்தல்.-

கம்பனியின் பெயர் : உமாமஹேஷ்வரன் பவுன்டேஷன்
கூட்டிணைப்புத் திகதி : 2018. 01.22
பதிவிலக்கம் : ஜீஏ 3444
பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி: இல. 22, சிவன்கோயில் முன் ஒழுங்கை, சின்னபுதுக்குளம் , வவுனியா

திருமதி சந்திரவதனி வாசவன்,
கம்பனிச் செயலாளர்.

5- 20

---

### அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ், கூட்டிணைக்கப்படல் தொடர்பான பகிரங்க அறிவித்தல்.-

கம்பனியின் பெயர் : லெபர் அஸ்ஸா (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனிப் பதிவு இல.: பீவீ 129517
பதிவு செய்த திகதி : 2018.02.05
கம்பனியின் முகவரி : இல. 88, முளாய் கிழக்கு, சுழிபுரம்

நா. பார்த்தீபன்,
கம்பனிச் செயலாளர்.

5- 21

---

### அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ், கூட்டிணைக்கப்படல் தொடர்பான பகிரங்க அறிவித்தல்.-

கம்பனியின் பெயர் : இலவன் டு இலவன் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனிப் பதிவு இல.: பீவீ 118362
பதிவு செய்த திகதி : 2016.11.28
கம்பனியின் முகவரி : இல.132, கருகெலியாவ, பபுகம, தம்புள்ள

நா. பார்த்தீபன்,
கம்பனிச் செயலாளர்.

5- 22

---

### அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளது.-

கம்பனியின் பெயர் : எகோ பல்ப் பகேஜின் (பிறைவேட்) லிமிட்டட்
பதிவிலக்கம் : பீவீ 131548
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2018. 04.06
பதிவு அலுவலகம் : இல. 10/1, லிலியன் அவெனியு, கல்கிஸ்ஸை

பினான்சியல் அன்ட் பிசினஸ்
அசோசியேட்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்,
கம்பனிச் செயலாளர்.

5- 46

---

### பகிரங்க அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 8 ஆம் பிரிவு ஏற்பாடுகளுக்கு அமைய , என்.வை.கே. லயின் லங்கா ( பிறைவேட் ) லிமிட்டட் தனது பெயரை என்.வை.கே. லங்கா (பிறைவேட்) லிமிட்டட் என்று மாற்றிக்கொண்டுள்ளது என்பது 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவிற்கு அமைய இத்தால் அறிவிக்கப் படுகின்றது.

முன்னைய கம்பனியின் பெயர் : என்.வை.கே.லயின் லங்கா (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனி இலக்கம் : பீவீ 5088
பதிவு செய்யப்பட்ட அலுவலகம்: இல. 400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10
புதிய கம்பனியின் பெயர் : என்.வை.கே. லங்கா (பிறைவேட்) லிமிட்டட்

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

ஹேலீஸ் குரூப் சேர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனிச் செயலாளர்கள்.

இல. 400, டீன்ஸ் வீதி,
கொழும்பு 10,
2018, ஏப்பிறல் 23.

5- 67

### பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழ் , பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : லாங்காடெக் ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்
பதிவிலக்கம் : பீவீ 131274
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2018.03.29
பதிவு முகவரி : 83, ஹைலெவல் பிளாஸா, தெல்கந்த, நுகேகொடை

கே. என். விஜேசிங்ஹ,
கம்பனிச் செயலாளர்.

5-68

---

### ஒன்றிணைத்தல் நிறைவு தொடர்பான அறிவித்தல்

2018, மாச்சு 30 ஆம் திகதி அமுலுக்கு வரும் வகையில் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 240 மற்றும் 241ஆம் பிரிவுகளின் கீழ் திதுல் ( பிறைவேட் ) லிமிட்டட், வெஸ்வின் கன்ஸ்ட்ரக்ஷன் நக்காவிட ( பிறைவேட்) லிமிட்டட், பென்டெக் பவர் (பிறைவேட்) லிமிட்டட் மற்றும் சமன்கிரி ஹைட்ரோ இலக்ட்ரிக் (பிறைவேட்) லிமிட்டட் ஆகிய கம்பனிகளை W.K.V. ஹைட்ரோ டெக்நிக்ஸ் ( பிறைவேட்) லிமிட்டட் நிறுவனத்துடன் ஒன்றிணைக் கப்பட்டுள்ளது என இத்தால் அறிவித்தல் வழங்கப்படுகின்றது என்பதோடு ஒன்றிணைப்புச் சான்றிதழானது 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 244(1) ஆம் பிரிவுக்கு ஏற்ப வழங்கப்பட்டிருக்கின்றது.

ஒன்றிணைக்கப்பட்ட கம்பனியின் பெயர் : W.K.V. ஹைட்ரோ டெக்நிக்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்
ஒன்றிணைக்கப்பட்ட நிறுவனத்தின்
பதிவு செய்யப்பட்ட முகவரி : இல. 12, டொன் கரொலிஸ் வீதி, கொழும்பு 05
ஒன்றிணைப்பு அமுலாக்கப்பட்ட திகதி : 2018. 03. 30
ஒன்றிணைக்கப்பட்ட கம்பனியின்
பதிவு இலக்கம்: பீவீ 11882

5-69

---

### ஒன்றிணைத்தல் நிறைவு தொடர்பான அறிவித்தல்

2018, மாச்சு 01 ஆம் திகதி அமுலுக்கு வரும் வகையில் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 242 ஆம் பிரிவின் கீழ் லங்கா மார்கட் ரிசேர்ச் பியூரோ ( பிறைவேட் ) லிமிட்டட் நிறுவனத்தை T N S லங்கா ( பிறைவேட்) லிமிட்டட் நிறுவனத்துடன் ஒன்றிணைக்கப்பட்டுள்ளது என இத்தால் அறிவித்தல் வழங்கப்படுகின்றது என்பதோடு ஒன்றிணைப்புச் சான்றிதழானது 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 244(1)ஆம் பிரிவுக்கு ஏற்ப வழங்கப்படுகின்றது.

ஒன்றிணைக்கப்பட்ட கம்பனியின் பெயர் : T N S லங்கா (பிறைவேட்) லிமிட்டட்
ஒன்றிணைக்கப்பட்ட நிறுவனத்தின்
பதிவு செய்யப்பட்ட முகவரி : இல. 32/4, நாரஹேனபிட வீதி, நாவல
ஒன்றிணைப்பு அமுலாக்கப்பட்ட திகதி : 2018. 03. 01
ஒன்றிணைக்கப்பட்ட கம்பனியின்
பதிவு இலக்கம்: பீவீ 7228

5- 70

---

### கம்பனியின் பெயர் மாற்றல் தொடர்பான அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின் கீழ் கம்பனி தனது பெயரை மாற்றியுள்ளது என அறியத்தருகிறோம்.-

கம்பனியின் முன்னைய பெயர் : த இசுபலி பெமிலி பவுன்டேஷன்
கம்பனி இல.: ஜீஏ 2840
பதிவு அலுவலகம்: இல. 75, பிரேபுறுக் பிளேஸ், கொழும்பு 2
கம்பனியின் புதிய பெயர் : டவ் பவுன்டேஷன்

டவ் பவுன்டேஷன் சார்பாக,

ஹேமாஸ் கோப்பரேட் சர்விசஸ்
(பிறைவேட்) லிமிட்டட்
கம்பனிச் செயலாளர்கள்.

5- 76

---

### பகிரங்க அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 8 ஆம் பிரிவு ஏற்பாடுகளுக்கு அமைய , லொஜிவென்சர்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் தனது பெயரை எட்வான்டிஸ் புரொஜெக்ட்ஸ் அன்ட் இன்ஜினியரிங் (பிறைவேட்) லிமிட்டட் என்று மாற்றிக்கொண்டுள்ளது என்பது 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவிற்கு அமைய இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

முன்னைய கம்பனியின் பெயர் : லொஜிவென்சர்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனி இலக்கம் : பீவீ 552 பீவீ
பதிவு செய்யப்பட்ட அலுவலகம்: இல. 400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10
புதிய கம்பனியின் பெயர் : எட்வான்டிஸ் புரொஜெக்ட்ஸ் அன்ட் இன்ஜினியரிங் (பிறைவேட்) லிமிட்டட்

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

ஹேலீஸ் குரூப் சேர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனிச் செயலாளர்கள்.

இல. 400, டீன்ஸ் வீதி,
கொழும்பு 10,
2018, ஏப்பிறல் 16.

5-103

---

### கிறீன் லங்கா ஷிப்பிங் லிமிட்டட்
### கம்பனியின் பதிவு இல. பீபி 702

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 346(1)ஆம் பிரிவின் கீழான கலைப்பாளர் நியமனம் பற்றிய அறிவித்தல்.-

கம்பனியின் பெயர் : கிறீன் லங்கா ஷிப்பிங் லிமிட்டட்
பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி : கிறீன் லங்கா டவர், இல. 46/46, நவம் மாவத்தை, கொழும்பு 2
நீதிமன்றம் : வர்த்தக உயர் நீதிமன்றம் மேல் மாகாணம், கொழும்பு (குடியியல்)
வழக்கு இல.: HC ( Civil) 49/ 2016/ CO
கம்பனி கலைப்பாளர் பெயர்: G.J David
முகவரி :` C/o SJMS Associates Restructure & corporate Recovery, Level 3, No.11 Castle Lane, Colombo 04
நியமனத் திகதி : 2018, ஏப்பிறல் 06

5- 110/1

---

### கிறீன் லங்கா ஷிப்பிங் லிமிட்டட்
### கம்பனியின் பதிவு இல. பீபி 702

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 270(இ)(ஈ) ஆம் பிரிவின் கீழான கம்பனி கலைப்பு உத்தரவு பற்றிய அறிவித்தல்.-

கம்பனியின் பெயர் : கிறீன் லங்கா ஷிப்பிங் லிமிட்டட்
பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி : கிறீன் லங்கா டவர், இல. 46/46, நவம் மாவத்தை, கொழும்பு 2
நீதிமன்றம் : வர்த்தக உயர் நீதிமன்றம் மேல் மாகாணம், கொழும்பு (குடியியல்)
வழக்கு இல.: HC ( Civil) 49/ 2016/ CO
நீதிமன்ற கட்டளைத் திகதி : 2018.04.03
கோரிக்கை தாக்கல் செய்த திகதி : 2016.09.21
கம்பனி கலைப்பாளர் பெயர்: G.J David
முகவரி : C/o SJMS Associates Restructure & corporate Recovery, Level 3, No.11 Castle Lane,Colombo 04

5- 110/2

---

### பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : விக்டரி பார்ம் (பிறைவேட்) லிமிட்டட்
பதிவிலக்கம் : பீவீ 130802
பதிவு முகவரி : விக்டரி பார்ம், கட்டுகெலியாவ வீதி, மின்னேரிய

கம்பனிச் செயலாளர்.

5- 113

---

### பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : ப்ரோபைக் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனி இல. : பீவீ 128730
பதிவு முகவரி : இல. 367, பயிப் வீதி, ஹோரகஹகந்த ஒழுங்கை, தளங்கம வடக்கு, கொஸ்வத்த, பத்தரமுல்லை

கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2018. 01. 09

கோர்ப்பரேட் அட்வைசரி சேர்விசஸ்
( பிறைவேட்) லிமிட்டட்
கம்பனிச் செயலாளர்கள்.

5-119

---

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவிற்கமைய பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : சொப்ரெனோஸ் கலம்போ (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனி இலக்கம் : பீவீ 130911
பதிவு அலுவலக முகவரி : இல. 47, அலெக்ஸ்சான்றா பிளேஸ், கொழும்பு 7
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2018. 03. 29

கோர்ப்பரேட் அட்வைசரி சேர்விசஸ்
(பிறைவேட்) லிமிட்டட்
கம்பனிச் செயலாளர்கள்.

5- 120

---

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவிற்கமைய பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : றூட் மொபைல் லங்கா (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனி இலக்கம் : பீவீ 131044
பதிவு அலுவலக முகவரி : இல. 47, அலெக்ஸ்சான்றா பிளேஸ், கொழும்பு 7
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2018. 03. 23

கோர்ப்பரேட் அட்வைசரி சேர்விசஸ்
(பிறைவேட்) லிமிட்டட்
கம்பனிச் செயலாளர்கள்.

5- 121

---

**பொது அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : டெர்க்கிடென் என்ஜினியரிங் கன்சல்டன்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனி இலக்கம் : பீவீ 131314
பதிவு முகவரி : இல. 41/1, போகாவில ஒழுங்கை, ஹிரிபிடிய, பன்னிப்பிட்டிய
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2018. 04. 02

கம்பனிச் செயலாளர்.

5- 123

---

**விசேட அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்**

